# எனது செல்ல உயிரி

உலகில் பல உயிர்கள் வாழ்கின்றன. அவற்றுள் நாய், பூனை, ஆமை, மீன், முயல், கிளி, குருவி போன்றவை செல்ல உயிரிகளாக வளர்க்கப்படுகின்றன. நான் அன்போடு வளர்க்கும் உயிரி சுமி. அதுவே என் செல்ல உயிரி. பால் போன்ற நிறம். மெல்லிய உடல். பார்க்க அழகாக இருக்கும். அது என்னைக் கண்டதும் சுற்றிச்சுற்றி வரும் என் அன்புப் பூனைக்குட்டி. எனக்கு இதன்மேல் மிகவும் விருப்பம். அது தன் பெரிய கண்களை உருட்டிஉருட்டி என்னைப் பார்க்கும். நான் உணவு உண்ணும் போது என்னோடு அருகில் இருந்து சாப்பிடும். என் மடியில் ஏறிப் படுத்துத் தூங்கும். நான் பள்ளி சென்று வீட்டுக்குத் திரும்பி வரும்போது அம்மாவுடன் என் செல்ல சுமி என்னை வரவேற்க வீட்டு வாசலில் வந்து நிற்கும். மாலை வேளைகளில் நானும் என் சுமியும் தோட்டத்திற்குச் சென்று விளையாடுவோம். அப்போது அது தனது கட்டையான கால்களினால் பந்தை உருட்டி விளையாடுவது பார்க்க அழகாக இருக்கும். சுமி தன் கால் நகங்களை மரத்திலே தேய்த்துக் கூர்மையாக்கும். மரத்தில் பாய்ந்து ஏறும். துள்ளித்துள்ளி என்னிடம் ஓடி வரும். சுமியைப் பார்த்துக்கொண்டிருப்பதில் எனக்கு கொள்ளை விருப்பம். எனது செல்ல உயிரி சுமியை என்னால் என்றுமே மறக்க முடியாது.